# விடுதலை

இதழ் :-3 ஐப்பசி மாதம் (15.10.83) மாதம் இருமுறை. பக்கங்கள் :- 4

## எமது கருத்து

### தீவிரவாத இளைஞர்களே சிந்தியுங்கள்!

சமூக ஏற்றத்தாழ்வுகள், சமயச் சண்டைகள், பொருளாதாரச் சுரண்டல்கள் எதுவுமே இல்லாத சுதந்திரமான சோஷலிச தமிழீழத்தை அடைந்திட வேண்டுமென நாமெல்லாம் போராடுகிறோம்.

இப்புனித விடுதலைப் போராட்டத்தில் தமிழினம் முழுவதுமே இன்று தம்மால் இயன்றளவு பங்களிப்பை செய்து வருகிறது. சிலர் பொருளைத் தருகிறார்கள், சிலர் தம்மைத் தருகிறார்கள், சிலர் எல்லாவற்றிலும் உயர்ந்த மிகப் பெரிய தியாகமாக உயிரைத் தருகிறார்கள்.

எந்தவொரு மனிதனும் இழக்கமுடியாத உயிரையே தமிழீழ விடுதலைக்கென தந்து, ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள எமது இளைஞர்களுக்கு, தமிழீழம் தனது சிரம் தாழ்த்தி வணக்கத்தைத் தெரிவிக்கிறது. வாழ்விலே மிகப்பெரிய தியாகத்தைச் செய்யும் எங்கள் இளைஞர்களுக்கு தமிழினம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

தமிழினத்தின் விடுதலையை எங்கள் இளைஞர்கள் பெற்றுத் தருவார்களென்ற பூரணமான நம்பிக்கையோடு தமிழினம் காத்திருக்கிறது.

இந் நம்பிக்கைக்கு மத்தியில் இளைஞர் இயக்கங்களின் நடவடிக்கைகளோ எம்மைப் பெரும் வேதனையில் ஆழ்த்துகிறது. அதுமட்டுமல்ல, இந்நடவடிக்கைகள் தமிழீழத்திலும் தொடருமானால் தமிழீழமும் அதன் மக்களும் நிம்மதிப் பெருமூச்சை எக்காலத்திலும் விடமுடியாத ஒரு சூழ்நிலை நிச்சயம் ஏற்படும். இவ்வளவு தியாகங்களுக்கு மத்தியிலும் பெறவுள்ள விடுதலையின் அர்த்தமே அழிந்துவிடும். தமிழீழம் ஒரு வங்காள தேசமாகவே மாறும். இந்நிலையைப் பயன்படுத்தி மக்களை சுரண்டுபவர்களும், சாதிவெறியர்களும், சமயங்களின் பெயரால் சீவிப்பவர்களும் தான் தமிழீழத்தில் தலையெடுப்பார்கள்.

இன்று கூட விடுதலைக்குப் போராடும் ஒரு இனம் போலவா நாம் நடந்து கொள்கிறோம்?. எம்மை ஆயுதபலத்தால் ஆண்டு கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசின் கெடுபிடி ஒருபுறம் நடந்து கொண்டிருக்கும் போது, விடுதலை இயக்கங்கள் ஒன்றையொன்று திட்டித் தீர்ப்பதிலும், விமர்சனம் செய்வதிலுமே காலத்தைச் செலவிடுகின்றன.

எமது பொது எதிரியை வீழ்த்த வேண்டிய இவ்வேளையில், நாம் எம் இனத்துள்ளே களையெடுப்புச் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இந்நிலை மாற வேண்டும்.

இய இயக்கங்கள் யாவும் உண்மையாக தமிழீழ விடுதலையை நேசிப்பவையாக, அதனை அடைந்தே தீருவது என்ற குறிக்கோளுடன் இயங்குபவையாக இருந்தால், பதவிப் போட்டிகளுக்கு அப்பால் இய்ங்குபவையாக இருந்தால், தமக்குள் உள்ள் சிறு சிறு கருத்து வேறுபாடுகளை மறந்து மன்னித்து, தமிழினத்தின் நலன் கருதி ஒன்றுபட்டு இயங்கவேண்டும். இதுவே, தமிழினத்தின் ஏக்கமாகும்.

நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும். நடப்பவை நல்லவையாக அமையட்டும். தமிழீழ விடுதலைக்கென உழைக்கும் இயக்கங்கள் யாவும் ஒன்றுபட்டு செயற்படட்டும். இதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் விடுதலை விரைவில் கிட்டட்டும்.

மக்கள் தீர்ப்புக்கு விஞ்சியது எதுவுமில்லை. மக்கள் அபிலாசைகளுக்கு மதிப்பளிக்காத எந்த இயக்கமும் வளர முடியாது. எந்த மக்களின் விடுதலைக்காக இவ் இயக்கங்கள் செயற்படுகின்றனவோ அந்தமக்களின் கருத்துக்கும்; அபிலாசைகளுக்கும் இயக்கங்கள் மதிப்பளிக்க வேண்டும்.

மக்கள் சக்தி மகத்தானது. எனவே, மக்கள் விரும்பின்படி விடுதலை இயக்கங்கள் ஒன்றுபடட்டும்; அதிகபட்சம் வேண்டாத மோதல்களையும், விமர்சனங்களையும் தவிர்த்து, புரிந்துணர்வுடனுவது செயற்படட்டும்

"தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை."

— ஆசிரியர் —

"இலங்கையில் கலவரம் நடக்கும் என்பது மத்திய அரசுக்கு முன்பே தெரியும்"..

அமைச்சர் காளிமுத்து பேட்டி:--

இலங்கைக் கலவரத்தால் மனம் நொந்து உணர்ச்சிப் பிழம்பாக இருந்தார் தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் காளிமுத்து. அவரது மன துக்கத்தைக்கறுப்புச் சட்டை உணர்த்தியது.

இலங்கையில் இனக்கலவரங்கள் இன்னமும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அதைப் பற்றிய செய்திகள் வெளிவருவதுதான் நின்றிருக்கிறது. இலங்கையில் செய்திகள் மிகக் கடுமையாக சென்ஸார் செய்யப்படுகின்றன. அதனால் மட்டும் செய்திகள் வராமல் போவதாக நினைக்க வேண்டாம். கொந்தளிப்பூட்டும் இலங்கைச் செய்திகளை வெளியிட வேண்டாம் என்ற மத்திய அரசின் எண்ணத்திற்கு ஏற்பவும் நமது பத்திரிகைகள் செயல்படுகின்றன.

இன்னொன்று இலங்கையில் கலவரம் நடக்கப் போகிறதென்பதை மத்திய அரசு முன்கூட்டியே அறிந்திருக்கிறது என்றே நான் நினைக்கிறேன். இந்தக் கலவரங்களுக்கு பலநாட்களுக்கு முன்பே கோவையில் இருந்து இலங்கைக்குப் புறப்பட இருந்த சாரண இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு, 'இந்த சமயத்தில் நீங்கள் இலங்கைக்கு போகவேண்டுமா? என்று கேட்டு மத்திய அரசிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது.

அமைச்சர் சொன்ன இந்தஇரண்டு தகவல்களும் அதிர்ச்சியைத் தருகின்றன. அவர் தொடர்ந்து பேசினார்....

இலங்கையில் இவ்வளவு கொடுமைகள் நடந்த பிறகும் அவை மத்தியஅரசின் மனதைச் சற்றும் தொடவில்லை என்பது மிக நன்றாக உறுதியாகத் தெரிகிறது. பாலஸ்தீனப் பிரச்சனையென்றால் அராஃபத்துக்கு வரவேற்பு நடக்கிறது. திபெத் விவகாரத்தில் தலாய்லாமாவுக்கும், பஞ்சன்லாமாவுக்கும் அடைக்கலம் தரப்படுகிறது. ஆனால் இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது மட்டும் மத்திய அரசின் மனத்தை உறுத்தவில்லை. கண்டித்து குரல் எழுப்பாமல் மெத்தனம் காட்டுகிறது.

பல உயிர்களைக் கொன்று குவித்த அந்த நாட்டுடன் இன்னும் தொடர்பு வைத்துக் கொள்ள மனச்சாட்சி எப்படி ஒத்துக் கொள்கிறது?. முதல் காரியமாக அந்த உறவைத் தூக்கி எறிய வேண்டாமா? ஜெயவர்த்தனே தனது தம்பியை அனுப்புகிறாராம் பேச்சு வார்த்தை நடத்த! அந்த 'தம்பி' யார் தெரியுமா? அவர்தான் அந்த இனவெறி கொலைகளுக்கு பின்னணியாக இருந்தவர். திட்டமிட்டு நடந்த தமிழர் கொலைக்கு அவரே காரணகர்த்தா. அவர்தான் தூது வருகிறார்!

இன்று தமிழ்நாடு வேதனையில் கிடக்கிறது. தேசிய ஒருமைப்பாடு பேசுவோரைக் கேட்கிறேன், எங்கள் வேதனையில் பாரதத்தின் எந்த பகுதியாவது பங்கு பெற்றதா? பக்கத்து ஆந்திராவில் கூட தமிழர் தாக்கப்பட்டதற்கு சிறிய சலசலப்பு இல்லையே?

.. மிகுதி அடுத்த இதழில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா பா.உ. திரு.சிவசிதம்பரம் தாக்குதலுக்கு உள்ளானர்

இரகசியத் தகவலின் பேரில் 30.9.83 அன்று மோகன் என்பவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, சோதனையிடப்பட்டபோது அவரிடம் 'டைனமைற்' ஒன்று கைப்பற்றப்பட்டது. இந்த ஆதாரமாகக் கொண்டு, அவர் கொடுத்த தகவலின்படி திரு.சிவசிதம்பரம் அவர்களின் மடுக்குளத்திலுள்ள பண்ணை முற்றுகையிடப்பட்டது. அப்போது அங்கிருந்த திரு.சிவசிதம்பரம் அவர்கள் உட்படப் பண்ணைப் பாதுகாவலர் நடராசா என்பவரும், மற்றும் ஊழியர்களும் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு சகலரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அவ்வேளையில் பண்ணையில் இருந்த வீட்டில் உள்ள ஓர் அறையில் சிவ்சிதம்பரம் அவர்கள் தனிமை-யாக அடைக்கப்பட்டு, சிறுநீர் பருக்கப்பட்டு தாக்குதலுக்கு உள்ளானர். மேலும் அவ்வீட்டில், அலங்காரப் பொருளாக வைக்கப்பட்டிருந்த ஒரு புலி உருவத்தை, இராணுவத்தினர் துண்டு துண்டாக வெட்டி, அங்கிருந்த சகலரின் வாய்க்குள்ளும் பலவந்தமாக திணித்து, தண்ணீரும் பருக்கி, விழுங்கும்படி நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். பின்பு பண்டாரிக்குளத்தைச் சேர்ந்தவரும், எட்டுப் பிள்ளைகளின் தந்தையுமாகிய நடராசா (38 வயது ) என்பவர் ஆயுதப்படையினரால் விசாரணை செய்யப்பட்டு, மிருகத்தன்மாகத் தாக்கப்பட்டார். பின்பு திரு.சிவசிதம்பரம் அவர்களை வீட்டுக்குச் செல்ல அனுமதித்துவிட்டு, நடராசாவை மேலும் விசாரணைக்காக, இராணுவ முகாமுக்கு கொண்டு சென்று, அங்கும் குப்புறப் படுக்க வைத்து இரும்புச்சுட்டியலால் முட்டு முட்டாக எலும்பு நொருக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டார். பின் அவரது உடலை சாக்கில் போட்டுக் கட்டி, அவரது கிராமத்துக்கு கொண்டு சென்று அவரது உடல் எரிக்கப் பட்டது. மோகன் என்பவரும் படுகாயத்துடன் இராணுவக் காவலுடன் அனுராதபுர வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறர். திரு.சிவசிதம்பரம் பாதுகாப்பான ஓர் இடத்தில் இருப்பதாக அறியப்படுகிறது.

## கள்ளுத்தவறணைகள் தீயிடுவதை நிறுத்துங்கள்

அண்மைக்காலங்களில் வட பகுதியில் பரவலாக கள்ளுத் தவறணைகள் எரிக்கப்படுகிறது. இச்செயல் திட்டமிடப்பட்டு, நடைபெறுகின்றது என்றே நாம் கருதுகிறோம். கள்ளு விற்பனை மூலம் வருடமொன்றுக்கு 36 கோடி ரூபாவும், மற்றும் மதுபான விற்பனை வரியாக 76 கோடி ரூபாவும், ஸ்ரீலங்கா அரசுக்கு வருவாய் ஏற்படுகிறது என்றும், இது தடுக்கப்பட வேண்டுமெனவும் இயக்கமொன்று பிரசுர மூலம் கோரியுள்ளது.

ஆயினும் சரியான திட்டம் ஒன்று இல்லாமல் கள்ளுத் தவறணைகளுக்கு தீ வைப்பதால், தெங்கு பனம்பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்கள் 2500 பேர் வேலை இழக்கவும், சீவல் தொழில்மூலம், தமது சீவியத்தை நடத்தி வரும் எத்தனையோ ஆயிரக் கணக்கான சீவல் தொழிலாளர்கள் நடுத்தெருவில் நிற்க வேண்டிய நிலையும் ஏற்படும்.

இந் நிலையைத் தவிர்ப்பதாயின் நாம் சரியானதொரு மாற்றுத் திட்டமொன்றை முன் வைக்க வேண்டும். அதாவது, பனங்கள்ளினை பதநீராக மாற்றி அதன் மூலம் பனஞ்சீனி, கருப்பட்டி போன்றவற்றை தயாரித்து, எமது மக்கள் இவற்றை பயன்படுத்துவதன் மூலம் நாம் ஸ்ரீலங்கா ஏகாதிபத்தியத்துக்கு வரியாகக் கொடுக்கும் பலகோடி ரூபாவை மீதப்படுத்த முடியும். அத்துடன் அதிகமானோருக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க முடியும் என்பதைத் தெரிவிக்கின்றோம்.

## புகையிரத நிலைய அதிபர் தாக்கப்பட்டார்.

கண்டி புகையிரத நிலைய அதிபர் திரு.தியாகராசா 30.9.83 அன்று தனது கடமையை முடித்துவிட்டு, நிலையத்திலிருந்து வீடு செல்லும் வழியில் சிங்களக் காடையரினால் (உம்பகொட்டியா) நீ புலியடா என்று சத்தமிட்டு, கைகளினாலும், கல்லுகளினாலும் தாக்கப்பட்டு தலையில் படுகாயம் அடைந்தார் என்று நம்பகமான தகவல் கிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழீழ வாலிபன் கைது

27.9.83 இரவு 9.05 க்கு சுவிஸ் எயர் லைன்ஸ் விமானத்தில் இத்தாலிக்குப் பயணம் மேற்கொள்ள இருந்த யோசேப்பு என்பவர் ஸ்ரீலங்காவின் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து இரகசியப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். இதுவரை அவரைப்பற்றிய எதுவித தகவலும் இல்லை.

## பத்தாயிரம் ஈட்டிக்கு ஆடர்

ஸ்ரீலங்காவின் சிங்கள பௌத்த பயங்கரவாதத்தின் தலைவனாக உலகமெங்கும் நாமாகரணம் சூட்டப்பட்டுள்ள சிறில் மத்தியூ, கல்குடாவில் சட்டவிரோதமாகக் குடியேறியுள்ள சிங்களவரைக் காக்க 10,000 ஈட்டிகளை தயார் செய்து தமது அமைச்சுக்கு வழங்கும்படி ஆடர் கொடுத்துள்ளார்.

## சூசகமான அறிவிப்பு

சிறிலங்காவின் கைத்தொழில் அமைச்சரும் பௌத்த பயங்கரவாத தலைவருமான சிறில் மத்தியூ தனது அமைச்சில் கடமையாற்றும் தமிழரான ஒரு உதவி செயலாளரிடம் ஜூலையில் இடம்பெற்ற தமிழினப் படுகொலைக்கு சரியாக இரண்டு வாரங்களுக்கு முன் அச்செயலாளரின் வீட்டுத் தளபாடங்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யும் படி கூறினார். அவர் காரணம் கேட்டபோது, சிரித்து மழுப்பிவிட்டாராம். இப்போது அந்தத் தமிழ் ஊழியரும், தனது உடமையெல்லாம் பறிகொடுத்து தமிழீழத்திற்கு வெறுங்கையோடு அகதியாக வந்துள்ளார்.

## தமிழ்க் குடும்பப் பெண்ணின் கற்பு பறிபோனது

ஆடி 30ந் திகதி வவுனியாவில், இனவெறி பிடித்த சிங்கள விமானப்படையினரால் தச்சன் குளத்தைச் சேர்ந்த வேல் சுப்பிரமணியம் என்பவரின் மனைவி அவர்முன் இரு விமானப்படையைச் சேர்ந்த காமவெறியர்களால் கற்பழிக்கப்பட்டார். அத்துடன் அவருடைய மகளையும் அடுத்தநாள் தங்களுக்குத் தரவேண்டும் என்று கூறிச் சென்றார்களாம்.

## தமிழ்ப் பிரிவுகளுக்கு மூடுவிழா

கொழும்பு மாவட்டத்திலுள்ள முன்னணிப் பாடசாலைகள் பலவற்றில் இருந்த தமிழ்ப் பிரிவுகளில் மாணவர்கள் போதியளவு இல்லை என்று காரணம் காட்டி அவற்றிற்கு மூடுவிழா நடத்திவிட இப்போது சிறீலங்கா அரசு தீர்மானித்துள்ளதாக நம்பகமாகத் தெரிய வருகின்றது.

## தமிழ்ச் சேவையில் தொல்லை

இலங்கை வானொலியின் சிங்கள அறிவிப்பாளர்களும், ஊழியர்களும் தமிழ் ஊழியர்களுக்குத் தொல்லை கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்கள் இரவு ஒலிபரப்பு முடிவடையும் போது சிங்கள சிறீலங்காவின் தேசிய கீதத்தை சிங்களத்தில் ஒலிபரப்பும்படி தமிழ் ஊழியர்களை மிரட்டுகிறார்களாம்.

## வயிற்றுக்குள் பெற்றோல்

நுவரெலியாவில், சிங்களக் காடையர்களை எதிர்த்த தமிழ் வாலிபர் ஒருவரது வயிற்றை சிறீலங்கா இராணுவமும், காடையர்களும் கீறி அதனுள் பெற்றோலை ஊற்றி தீ மூட்டியதோடு உயரமான மலையொன்றிலிருந்து உருட்டி கொலை செய்துள்ளார்கள்.

இவ்விதழை மற்றவர்களுக்கும் கொடுக்கவும்.

தமிழின விடுதலை வெளியீட்டுக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org